★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 வைகாசி 14 ஷஃப 14 இதழ் 106

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 28—5—83

## பாதிக்கப்பட்ட பேராதனை மாணவர்கள் பல்கலைக்கழகம் திரும்ப முடிவு!

(யாழ்ப்பாணம்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறிய தமிழ் மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்குத்திரும்ப முடிவு செய்துள்ளனர்.

நேற்று யாழ் பல்கலைக்கழகத்தில் பேராதனைப் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய தமிழ் மாணவர்கள் நீண்ட நேரம் கூடி ஆலோசனை நடாத்தியபின்னரே திரும்புவதற்கு முடிவுசெய்ததாகத் தெரிவித்தனர்.

பேராதனை விரிவுரையாளர்கள், மாணவர்கள், மாணவர் வைத்தலைவர் ஆகியோர் எடுத்துக்கொண்ட முடிவுகளும் நேற்று நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது.

இதனைத் தொடர்ந்து பாதுகாப்பு நிலைமைகளைமுன்னிட்டு பகுதி பகுதியாகப்பல்கலைக்கழகம் திரும்பவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அக்பர் விடுதியிலுள்ள மாணவர்கள் இம்மாதம் 30ம் திகதி காலை புகையிரதத்தில் புறப்பட்டு பொல்காவலை ஊடாகப் பேராதனைக்குச் செல்லவேண்டும்மற்றைய விடுதிகளிலுள்ளமாணவர்கள் இம் மாதம் 31ம் திகதியும் ஜூன் முதலாம் திகதியும் திரும்ப வேண்டும். மாணவிகள் ஜூன் 5ம் திகதி அளவில் பல்கலைக் கழகம் திரும்பவேண்டும். இம் மாதம் 30ம் திகதி புறப்படும் மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் மேலும் பிரச்னைகள் எழுந்தால், மற்றைய மாணவ-மாணவிகளுக்கு ஒவ்வொரு புகையிரத நிலையங்களில் வைத்து அறிவிப்பதற்காகவே மேற்குறிப்பிட்டபடி பகுதி பகுதியாக தமிழ் மாணவ-மாணவிகள் புறப்படவேண்டும்'' என முடிவுசெய்யப்பட்டது. (மா)

## “நீதி கிடைக்குமென நீண்டகாலமாக எதிர்பார்த்து

# ஏமாந்த தமிழ் இளைஞர்கள்

# இன்று துப்பாக்கி ஏந்துகிறார்கள்

## தீயகருத்துள்ள பாடநூல்கள் தீக்கிரையாக்கப்படவேண்டும்”

### நடேசன் கியூ. ஸி. கருத்து

(யாழ்ப்பாணம்)

சிங்களப்பகுதியில் ஒரு துப்பாக்கிச் சூடு நடந்தால் குற்றவாளியைக் கண்டு பிடிக்க முயற்சிப்பார்களே தவிர சம்பவம் நடந்த சிங்களக் கிராமத்தை எரிக்கமாட்டார்கள். அது தங்கள் நாடு என்று எண்ணுகிறார்கள். தமிழ்மக்கள் எல்லோரையும் தங்கள் எதிரிகள் எனப் பாதுகாப்புப்படையினர் நம்புவதாலேயே, இங்கு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் நடந்ததும், அப்பகுதி முழுவதையும் எரிக்கிறார்கள். இதற்கு அடிப்படைப் பிரச்னையை கண்டுபிடித்து மாற்றம்செய்ய வேண்டும்.”

யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற “இலங்கையில் கல்வியும்மனித உரிமையும்” என்ற நூல்வெளியீட்டுவிழாவில் முன்னாள் செனட்டர் திரு. திரு. எஸ். நடேசன் கியூ. ஸி. மேற்கண்டவாறு கருத்துவெளியிட்டார்.

திரு. ஐ. பி. துரைரத்தினம் தலைமையில் நடந்த இந்த நூல் வெளியீட்டுவிழாவில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் ஆய்வுரைநிகழ்த்தினார் நூலின் முதற்பிரதியை டாக்டர் ஜேம்ஸ் இரத்தினம் பெற்றுக் கொண்டார். திரு. எஸ் நடேசன் கியூ ஸி மேலும் கூறியதாவது:

“நாட்டில் உள்ள அடிப்படைப் பிரச்னையை ஆளமாக ஒருவரும் ஆராய முற்படவில்லை அடிப்படைப் பிரச்னை என்ன? ஏன் இந்த இரு சமூகங்களுக்கிடையில் இவ்வளவு பிணக்குகள் ஏற்பட்டுள்ளன?

### “எங்கும் பதட்டநிலை”

“நான் யாழ்ப்பாணம் வந்த போது எங்கும் பதட்டநிலையாக இருக்கிறது விங்குவடித்துவிட்டார்கள், இங்கு எரித்துவிட்டார்கள் என்றே மக்கள் கூறுகிறார்கள். இந்தப் பதட்ட

[8-ம் பக்கம் பார்க்க]

## ரங்கநாதன் கியூ. ஸி. காலமானார்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் பிரபல சட்டத்தரணி திரு. சி. ரங்கநாதன் கியு ஸி. தமது 74வது வயதில் நேற்றுக் காலமானார்.

சட்டத்துறையில் நீண்டகாலம் பிரபலம்பெற்றிருந்த திரு. ரங்கநாதன் பல சமூக சேவை ஸ்தாபனங்களுடனும் தொடர்புகொண்டு பெரும் பணியாற்றினார்.

கோடீஸ்வரன் வழக்கில் பிரிவிக்கவுன்சிலில் மனுதாரருக்காக ஆஜரான சட்டத்தரணி சி ரங்கநாதன் கியு. ஸி அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

அளவெட்டியைச் சேர்ந்த வி செல்லையா நாகசுந்தரம் தம்பதிகளுக்கு புத்திரராகப் பிறந்த இவர் ஆரம்பக் கல்வியை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கற்றார் பின்னர் கொழும்பு சென் ஜோசப் கல்லூரியில் பயின்று, பின் பல்கலைக் கழகத்தில் படித்து பட்டம்பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து பயின்று 1936ம் ஆண்டு அட்வக்கேட்டாக சத்தியப்பிரமாணம் செய்தார். 1965ம் ஆண்டு இராணி அப்புக்காத்தானார்

இவர் இராமகிருஷ்ணமிஷன் சபை உறுப்பினராகவும் உலகசப்பிரயாணிகள் சங்க இயக்குநராகவும், சைவபரிபாலன சபையின் உபதலைவராகவும், தியாகராஜஜானா சபையின்

(8ம் பக்கம் பார்க்க)

## “முல்லைத்தீவில் விவசாயப் பல்கலைக் கழகம் உருவாகவேண்டும்!” பேராசிரியர் வித்தி வலியுறுத்து

(வவனியா)

“முல்லைத்தீவில் விவசாயப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இப்பல்கலைக் கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமையவுள்ள விவசாய பீடத்துடன் தொடர்புகளைக்கொண்டு செயல்பட வேண்டும்.”

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நேற்று முல்லைத்தீவில் ஆரம்பமானபிராந்திய தமிழாராய்ச்சி மாநாட்டில் தலைமையுரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். இம்மாநாடு முல்லைத்தீவு வித்தியானந்தா வித்தியாலயத்தில் ஆரம்பமானது.

மாநாட்டில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், கிளிநொச்சி எம். பி. திரு வீ. ஆனந்தசங்கரி, யாழ். எம். பி. திரு. யோ. யோகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஜனாப், மன்சூர், மன்னார் எம். பி திரு. சூசைதாசன், மற்றும் பேராளர்கள், அறிஞர்கள் ஆகியோர் மாநாட்டு மண்டபத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

மாநாட்டினை மதத்தலைவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். உதவி அரசாங்க அதிபர் திரு இங்கரா வேலு வரவேற்புரை நிகழ்த்தினார். அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன் தொடக்கவுரை நிகழ்த்தினார்.

(8ம் பக்கம் பார்க்க)

### சங்காபிஷேகம்

மாவிட்டபுரம்:- பழை தலையிட்டி அருள்மிகு ஞானவைரவர் ஆலய சங்காபிஷேக விழா நாளை (29-5-83 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும். அடியார்கள் கலந்து வைரவப்பெருமானின் அருளைப் பெற்றுய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

திருஞானசம்பந்தர் குமரவேள் தர்மகர்த்தா

திருமதி சின்னையா குடும்பத்தினர் உபயகாரர்

(7378)

### வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

கீழ்க்காணும் இலங்கை எண்ணை நிரப்புநிலையங்களில் எரிபொருட்களையும் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளையும் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களே, நீங்கள் டீசல், பெற்றோல் கொள்வனவு செய்யும் பொழுது மேற்படி இரண்டு பம்களிலும் உள்ள மீற்றர் சைபருக்குக்கொண்டு வரப்பட்டுள்ளதா என்பதையும் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குக் கொடுக்கப்படும் எண்ணையின் அளவு சரியாக உள்ளதா என்பதையும் கவனிக்கும் பொறுப்பு உங்களுடையது என்பதை அறியத்தருகிறோம்.

LAXSIVA SALES PURCHESS LTD;

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இலங்கை எண்ணை நிரப்பு நிலயம் 113,

பிரதான வீதி, யாழ்ப்பாணம்

7370

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பருத்தித்துறை வீதிச்சந்தியிருந்து கல்வியங்காடு புதுச்செம்மணி றோட்டில் 150 யாருக்குள் சதுரமான நாலு பரப்புக் காணி வீடுகள் கட்டவும் விரும்பினால் தோட்டச் செய்கைக்கும் வசதியாக தென்னை, பனை, விளாத்தி மரங்களோடு விற்பனைக்கிருக்கிறது. யாழ்ப்பாணம், 28/1, யாழ். வீதி, நா. க. பொன்னுத்துரையோடு தொடர்பு கொள்ளவும். 7336

Honda CB 250 N நல்ல நிலையிலுள்ள மோட்டார் சைக்கிள் (நீல நிறம்) உடன் விற்பனைக்குண்டு.15, கோபால் ஒழுங்கை, (மனோகரா அண்மையில்) யாழ்ப்பாணம். 7353

எங்களிடம் அடைவு கடைகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கும் ஏற்றதுமான இரும்புப் பெட்டிகள் கைவசம் விற்பனைக்குண்டு. இரும்புப்பெட்டிகள் தயாரிப்பாளரும், பழுது பார்ப்பவர்களும். ''எவர் சில்வர் மாளிகை'', நி. 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 7371

## தேவை

புறேயிலர் கோழி, எங்களுடைய ஸ்தாபனத்திற்கு விநியோகம் செய்ய விரும்புவோர் தயவுசெய்து முகாமையாளரை பகல் 11 மணி தொடக்கம் 2 மணி வரை நேரிலோ அல்லது தபால் மூலமோ சந்தித்து விலை விபரங்களை பேசிக்கொள்ளவும். யாழ். சைனீஸ் றெஸ்ரரென்ற், 124, R.R. நல்லை றோட், யாழ்ப்பாணம். 7372

## பயிற்சி

டெலிவிசன் அன்ரனா (Antanna) தயாரித்தலும்- இணைத்தலும்- பயிற்சி வகுப்பு பிரபல நிறுவனத்தில் ஆரம்பமாகின்றது. கட்டணம் 275/- மட்டும். பயிற்சிக்காலம் ஒரு மாதம்- எவரும் சேரலாம். 30-5-83 முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 7349, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 7349

மோட்டார் மெக்கானிக், வெல்டிங், கடைச்சல் [லேத்] வயறிங் பயிற்சிகள் 01-06-83 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி 11B மொடர் சாக்கட்டிடம் ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம். 7337

## வைத்தியம்

மனநோய், வலி, மூலம் வயிற்றுப்புண், சர்மரோகங்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V.T. Chandiran, 218/5, Palaly Road, Kandarmadam, Jaffna. 7366

## தவறிவிட்டது

26-5-83 பகல் 10 மணியளவில் யாழ். பஸ் நிலையத்தில், எனது சிறிய டயறி, அடையாள அட்டையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து ஒப்படைக்கவும். அல்லது தகவல் தரவும். இ. விநாயகமூர்த்தி, 8ம் வட்டாரம், மண்டைதீவு. 7369

## கல்வி

பொறியியல் கல்வி நிலையம் (Engineering Education Centre) யாழ். நகரில் பஸ் நிலையத்திற்கு சமீபமாக வகுப்புக்கள் நடத்துகிறது. வயரிங் கெருவிரைவில் ஆரம்பமாகிறது. வயிண்டிங் கல்வி இலவசம் விரிவுரையாளர் S C. இம்மானுவேல் B sc Cey. Engineer Specialist in Electrical Machines உடன்தொடர்பு கொள்க. நிர்வாகி, யாழ்ப்பாண கல்வி நிலையம், சாந்தி தியேட்டர் அருகாமை யாழ்ப்பாணம். 7362

## வாடகைக்கு

புதிய பெரிய வீடு சகல வசதிகளோடு பிரயோசன வளவோடும் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி ஒழுங்கையில் வாடகைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். எஸ். பி. வேலாயுதபிள்ளை செம்பியன் லேன். கொக்குவில் போன்; 24062 7352

## கிராமோதய சபைத் தலைவர்

[மன்னார்]

விடத்தல்தீவு பெருங்களி பற்று கிராமோதய சபைத் தலைவராக திரு. அருளப்பு ஜேம்ஸ் 5 அதிகப்படியான வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்டார். ஐ. தே. கட்சி பிரமுகரான இவர் மாந்தைப் பிரிவு மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றின் தலைவரும், இலங்கைக் கடற்றொழில் ஆலோசனைச் சபை உறுப்பினருமாவார்.




# இன்றைய பலன்

வைகாசி -14ம் திகதி

சனிக்கிழமை

(28-5-83)

மேடம்: பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்துகொண்டிருப்பீர்கள், சிறிய விடயத்திற்கூட குறைகேட்க நேரிடும், கடற்றொழிலில் ஈடுபடுவோர் கவனம் செலுத்தவும், துயர்பிடித்த தினம்.

இடபம்: குடும்ப வாழ்க்கை குதூகலம் நிரம்பியதாக இருக்கும், காதலர்களாயின் இத்தினம் கற்கண்டுபோல் இனிக்கும், பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், திருப்பமான தினம்.

மிதுனம்: வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம், அவசரப் போக்கினால் ஆபத்துக்கள் விளையும், சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக்கூடும், சகோதர வழியால் சஞ்சலமுண்டு.

கடகம்: ஒளிமயமான நாள் ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உங்கள் உற்சாகத்தில் பெற்றோரும் துணை நிற்பர், விருந்தினர்கள் வருகையால் வீடே கலகலப்பாய் இருக்கும்.

சிம்மம்: வாழ்க்கையில் வசதிகள் பெருகும், கற்றதனால் பயன் கண்டிப்பாகக் கிடைக்கும், விஞ்ஞானிகள் சில கண்டுபிடிப்புகளால் பெரும் புகழ் அடைவர், புண்ணிய யாத்திரை உண்டு.

கன்னி: வருமானத்தில் அபிவிருத்தி காணப்படும், கடந்த சில நாட்களாக நிலவி வந்த தயக்கநிலை இன்று நல்ல முடிவை ஏற்படுத்தித் தரும், பிறந்தகத்தில் இருந்து அழைப்பிதழ் கிடைக்கலாம்.

துலாம்: இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர், ஏமாற்றத்திற்கு இடமுண்டு, எனினும் இருள்சூழ்ந்த நிலை உருவாகும், அதிகபேச்சைத் தவிர்க்கவும்.

விருச்சிகம்: பேச்சுவார்த்தைகளின் மூலம் உணர்ச்சி வசப்படாதிருப்பது விரும்பத்தக்கது, அவசர முடிவின் மூலம் அவப்பெயருக்கு இடமுண்டு, துதிபாடிக்கொண்டே துரோகம் செய்வார்கள்.

தனுசு: வட்டிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அதுமேலும் குட்டிபோடும், பணவிவகாரங்களில் மகிழ்ச்சியை அவிக்கும், உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும் உற்சாகமும் ஏற்படும்.

மகரம்: தொல்லைகள் அலைமோதும், மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள், குடும்பத்திலும் சிறுபிணக்கு இடமேற்படலாம், வைத்தியச்செலவுக்காக பணம் செலவாகும், நண்பர்களை நம்பவேண்டாம்.

கும்பம்:
பொன்னான சந்திப்பு ஒன்று கிடைக்கும், திறமைக்கு முதலிடம் உண்டு, இதயச்சுமை அகலும், நீண்டபயணம் குறித்து திட்டமிடல் நன்று, வாகன சாரதிகளுக்கு லாபமுண்டு.

மீனம்: உல்லாசமாகப் பொழுதைப் போக்குவீர்கள், இன்று அதிக சுறுசுறுப்புடன் செயலாற்றுவீர்கள், பிள்ளைகளின் நடவடிக்கைகள் பெருமையைத் தேடித்தரலாம், பொருள்வரவுக்கும் இடமுண்டு.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை

# கிளிநொச்சியில் காணி உத்தரவு பத்திரம் வழங்க ஏற்பாடு

(கிளிநொச்சி)

'கிளிநொச்சிப் பகுதியில் உள்ள உத்தரவுப் பத்திரம் பெறாத காணிக்காரர்களுக்கு பத்திரம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன,

கிளிநொச்சிக் காணி அலுவலகத்தினர் எடுத்த துரிதமுயற்சியின் பயனாக இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அனுமதிப்பத்திரம் கோரியகாணி விண்ணப்பங்கள் உரியமுறையில் பரிசீலிக்கப் பட்டு ஜனதிபதியின் சிபார்சுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன, இதனால் இப்பகுதி மக்கள் சட்டரீதியான காணிச் சொந்தக்காரராகும் வாய்ப்புக்கிட்டவுள்ளது'

கிளிநொச்சியில் நடைபெற்ற வீடமைப்பு அபிவிருத்தி சம்பந்தமான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர்

[7ம் பக்கம் பார்க்க]

## ஓராண்டு நினைவாஞ்சலி



அமரர் பொன். இராசையா

(உதவி தபாலதிபர்)

தோற்றம்: 16-01-1942 மறைவு: 08-06-1982

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மறைந்த எமது அன்புத் தெய்வமே. உம்மை விட்டுப்பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்களை நாம் ஒரு கணமும் மறக்கவில்லை. தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


அன்பு மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை
உறவினர்கள், சுற்றத்தவர்.

சரணவாய்-தெற்கு.
மண்டான். 7364

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணுலகுதந்தது: 17-5-1927

விண்ணுலகு பெற்றது: 8-6-1982



அமரர் சின்னத்தம்பி சிவஞானரத்தினம்

[சின்னராசா, S S R.]

அன்பே உருவான எங்கள் குலவிளக்கே! தாங்கள் இவ்வுலகத்தை துறந்து இன்றுடன் [28-5-83] ஒரு வருடம் ஓடி மறைந்துவிட்டது. தங்கள் கருணைமிகு இனிய தோற்றம், செயல்யாவும் எம் உள்ளத்தில் ஒளி விளக்காகப் பிரகாசித்துக்கொண்டேயிருக்கிறது. தங்கள் ஆன்மா சாந்தியடைய, சித்திவிநாயகர் கருணையை வேண்டி நிற்கின்றோம்,

மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள். (7374)

# ஜப்பான் வடமேற்குப் பகுதியில் கடல் கொந்தளிப்பு! 20 பேர் பலி!!

## பாடசாலை மாணவர் உட்பட 106 பேர் அலைகளால் அடித்துச் செல்லப்பட்டனர்

டோக்கியோ, மே,27

ஜப்பானின் வட மேற்குப் பகுதியிலுள்ள 'அகிட்டா' நகரின் கடற்கரைப் பகுதியில் பெரும் கடற் கொந்தளிப்பு ஏற்பட்டதால் சுமார் 20 பேர் வரை கொல்லப்பட்டனர். 106 பேரைக் காணவில்லை.

'அகிட்டா' பிரதேசத்தில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து இங்கு சுமார் மூன்று மீட்டர்கள் உயரத்துக்குக் கடல் அலைகள் மேலெழுந்து இப்பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தின. இத் திடீர் கொந்தளிப்பினால் கடற்கரைப் பகுதியில் நடமாடிக் கொண்டிருந்தவர்களில் பலரே பாதிக்கப்பட்டனர்

பாதிப்படைந்தவர்களில் பல பாடசாலைப் பிள்ளைகளும் அடங்குகின்றனர். கடற்கொந்தளிப்பு நிகழ்ந்தவேளை இரு ஆசிரியர்கள் சகிதம் 50 பாடசாலைப் பிள்ளைகள் கடற்கரைப் பகுதியில் நின்றிருந்தனர்.

அக்கரையோரப் பகுதியில் மேலும் சுமார் 45 கட்டிடத் தொழிலாளர்கள் கட்டிட நிர்மாண வேலையொன்றிலும் ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் அப்பேரலைகள் அடித்துச்சென்றனவென்று தெரிவிக்கப்பட்டது.

அடித்துச் செல்லப்பட்டவர்களில் சிலர் காப்பாற்றப்பட்டனர். ஆயினும் காணமற்போனவர்களில் பலர் இறந்திருக்கக் கூடுமென்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர்.

மீட்புப் பணிகளில் கரையோரப் பாதுகாப்புப் படையினர் ஹெலிகொப்டர்கள், விமானங்கள், படகுகள் சகிதம் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

'அகிட்டா' நகரம் ஜப்பானின் வடமேற்குக்கரையோரப் பகுதியில் உள்ளது. இங்கு 2 லட்சத்து 70 ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். இப்பகுதியிலும் இதன் அண்டைப் பகுதியிலும் அடிக்கடி பூமியதிர்ச்சிகள் ஏற்படுவது வழக்கம். எனவே, இப்பகுதி மக்களுக்கு வானியல், புவியியல் நிபுணர்கள் காலநிலை, மற்றும் நில அதிர்ச்சிபற்றிய அறிவிப்புக்களை அடிக்கடி வழங்கி வருவதுண்டு. சம்பவ தினமும் அப்பெரும் கொந்தளிப்புப்பற்றி அவர்கள் அறிவித்திருந்தனர். (கி)

### தேசிய திரைப்பட விழா:

# கமலஹாசன் விருது பெற்றார்

### 5 வயதுக் குழந்தைக்கும் பரிசு

புதுடில்லி, மே. 27

புதுடில்லியில் நேற்று இடம் பெற்ற முப்பதாவது தேசிய திரைப்படவிழாவில் 'மூன்றாம் பிறை' என்ற தமிழ்த்திரைப் படத்தில் நடித்த திரு கமலஹாசனுக்கு தலைசிறந்த நடிகருக்கான விருதுவழங்கப்பட்டது.

சிறந்த நடிகைக்கான விருது ஷபனா ஆஸ்மி என்ற நடிகைக்குவழங்கப்பட்டது. சிறந்த படப்பிடிப்பாளர் விருது திரு. பாலுமகேந்திராவுக்கும், சிறந்த இயக்குனர் விருது 'கண்சிவந்தால் மண்சிவக்கும்' என்ற படத்திற்காக திரு. ஸ்ரீதர் ராஜனுக்கும் வழங்கப்பட்டது. 'ஆரூடம்' என்ற மலையாளத் திரைப்படத்தில் ஐந்து வயதான விமலுக்கு சிறந்த குழந்தை நட்சத்திரம் விருது வழங்கப்பட்டது.

சிறந்த பாடகர் விருது திரு கே. ஜே ஜேசுதாசுக்கும், சிறந்த பாடகிவிருது திருமதி பி. சுசீலாவுக்கும் வழங்கப்பட்டன.

இந்திய ஜனாதிபதி திரு. ஜியானிஜெயில்சிங் இத்திரைப் படவிழாவில் கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார். அவர் இவ்விழாவில் பேசுகையில் கூறியதாவது: சமுதாயத்தின் இருண்டபகுதிகளை மக்களுக்குச்சுட்டிக்காட்டி அப்பகுதிகளை ஒளி பெறச்செய்ய திரைப்படத்துறை உழைக்கவேண்டும். பொழுது போக்குக்காகவென்று திரைப்படங்கள் தயாராகின்ற போதிலும், அவை மக்களின் மனதைக் கெடுப்பதாகவோ, தவறானவழியில் திசைதிருப்புவதாகவோ அமையக்கூடாது.

சமூக ஒருமைப்பாடு, கலாச்சாரம், பண்பாடு அமைதி, போன்றவற்றுடன் நாட்டு நலன், சமூகநலன், கருதிய அம்சங்களை திரைப்படங்கள் கொண்டிருக்கவேண்டுமென்று வலியுறுத்தினார்

பலமுன்னணி வடதென் நாட்டு நட்சத்திரங்கள் நடிக நடிகைகள் உட்பட ஏராளமானவர்கள் இத்திரைப்பட விழாவில்கலந்துகொண்டனர். [கி]

## சர்க்காரியா கமிஷன் விசாரணைகள் ஆரம்பம்

புதுடில்லி, மே. 27

மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையிலான பிரச்சினைகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்டுள்ள சர்க்காரியாக் கமிஷன் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

இந்த விசேட கமிஷன் அரசியல் நிலைமை, நிதி நிலைமை, அரசியல் சாசனம்போன்ற விடயங்கள் குறித்து ஆராயவிருக்கின்றது நிதிநிலைமைபற்றிய விடயமே முதலில் ஆய்வுக்குட்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கமிஷன் தனது விசாரணைகளின் அறிக்கையை ஒரு வருட காலத்தில் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த அறிக்கையின் அடிப்படையில் மத்திய, மாநில அரசுகளுக்கிடையே புதிய மாறுதல்கள் சில இடம் பெறுமென்று தெரிவிக்கப்பட்டது.

சர்க்காரியாக் கமிஷன் விசாரணைகளை மேலும் விரிவாக்கும் வகையில் நிர்வாக அனுபவம் மிக்க இரண்டு அல்லது மூன்று உறுப்பினர்களை இக்கமிஷனில் இடம்பெறச்செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதற்கான தகுந்த ஆட்களைத் தேடுவதில் அரசு ஆர்வங்காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ராமசுப்பிரமணியம் இக்கமிஷனின் செயலாளராக இருந்துவருகின்றார். (கி)

## தெலுங்கு - கங்கா கால்வாய்த் திட்டம்

சென்னை, மே. 27

''மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை, ஒத்துழைப்பு என்பனவற்றை உணர்த்துவதாக தெலுங்கு-கங்கா கால்வாய்த் திட்டம் அமைந்துள்ளது என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சென்னை தேருவினையாட்டரங்கில் தெலுங்கு-கங்கா கால்வாய்த்திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கும் நிகழ்ச்சிநடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் பேசும் போதே திருமதி காந்திமேற்கண்டவாறு கூறினார்.

இந்தியாவிலுள்ள. பிரதான பிரதிநிதிகளிலிருந்தும் நீரைப் பெற்று வரண்டமாநிலங்களுக்கு அந்நீரை வழங்குவது தமது திட்டங்களில் ஒன்றென்றும், தெலுங்கு-கங்கா கால்வாய்த்திட்டம் இந்திய மாநிலங்களுக்கிடையே நிலவவேண்டிய ஒற்றுமையை எடுத்துணர்த்துவதாக இருக்கிறதென்றும் அவர்குறிப்பிட்டார்

இந்த வைபவத்தில் ஆந்திர முதல்வர் ராமராவ் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரன், மகாரஷ்டிர முதல்வர் கர்நாடக முதல்வர் ஆகியோரும் கலந்து கொண்டார்.

'தெலுங்கு-கங்கா கால்வாய் கிருஷ்ணாநதியிலிருந்து தமிழகத்துக்குநீரைக்கொண்டு வர அமைக்கப்படுகிறது. ஆந்திர மாநிலமும் தமிழ்நாடும் கூட்டாகவே இத்திட்டத்தை ஆரம்பித்துள்ளன,

மொத்தம் 760 கோடி ரூபா இத்திட்டத்துக்கு செலவாகிறது. தமிழகத்தின் பங்களிப்பு 200 கோடி ரூபாவாகும். இத்தொகையின் முதலாவது தவணைப்பணமாக 30கோடி ரூபாவை இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி மூலமாக ஆந்திரமுதல்வரிடம் திரு. எம். ஜி. ஆர். இந்தவைபவத்தில் கையளித்தார். கி)


# இன்று ஆரம்பம்!

83 November / December 84 March

**CHARTERED PRELIMINARY CHARTERED LICENTIATE**

83 NOVEMBER – DECEMBER

**I A A PART I & PART II**

கொழும்பு பிரபல விரிவுரையாளர்களினால் போதிக்கப்படுகிறது

**ICMA** Section "A" நடைபெறுகிறது. 5-6-83க்குப் பின் அனுமதி இல்லை
முழுக் கட்டணமும் 225/- மட்டுமே

**ICMA** Section 'B' Part I
**IAB** Foundation, Inter, Final Stages

ஆரம்பம்:
5-6-83 காலை 9-00

விபரங்கட்கு:

**DARMANANDA INSTITUTES**

250, Stanley Road, (ஸ்ரீதர் தியேட்டர் முன்பாக) Jaffna.

Telephone: 24011

### மணிவாக்கு

இன்பம் அனுபவிக்க நீ விரும்பினால், பிறர் இன்பம் அடைய வழிசெய்! குறுக்கு வழியும் - கோணல் நடத்தையும் கடைப்பிடிப்பதால் நிச்சயமாக இன்பம் துய்க்கமுடியாது. மற்றவர்களையும் அணைத்துக்கொண்டு தான் செல்லவேண்டும்.

— இங்கர்சால்

# நமது நோக்கு

## பேராதனை மாணவர் பாதுகாப்பு

இலங்கைக்கொரு ஒக்ஸ்போட் அல்லது கேம்பிறிட்ஜ் போன்ற தரமான பல்கலைக்கழக அமைப்பை உருவாக்கினார் உலகப் புகழ்பெற்ற அதன்முதல் உபவேந்தர் பேராசிரியர் முதல் உபவேந்தர் ஐவர் ஜென்னிங்ஸ்.

அவருக்குப் பின்வந்த பல உபவேந்தர்கள் காலத்தில் படிப்பிலும் நிர்வாகத்திலும் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டன.

சமுதாய பொருளாதார மாற்றங்கள் ஏற்படுத்தும் வாழ்க்கைமுறை பல்கலைக்கழகத்தைவிட்டு வைக்கவில்லை.

இவற்றிற்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் பேராதனை பல களம் கண்ட பல்கலைக்கழகமாய் விட்டது.

எத்தனை பகிஷ்கரிப்புக்கள், வேலை நிறுத்தங்கள், வன்செயல்கள் பொலிசார் மோதல், துப்பாக்கிப்பிரயோகம், கொலை தானும் இக்காலகட்டத்தில் நடைபெற்றன.

மாணவர் கல்வி காலத்துக்குக் காலம் படுமோசமான முறையில் பாதிக்கப்பட்டது நினைவுக்கு வருகிறது

எந்த நிலையிலும் இன்று பேசப்படும் சிங்கள-தமிழ் மாணவர்பிணக்கு, மோதல் என்பதற்கு இடமிருந்ததாகத் தெரியவில்லை.

பேராதனை மாணவ சமுதாயம் நடத்திய போராட்டங்கள் எல்லாம் பல்கலைக்கழக நிர்வாகத்தின் சீர்கேட்டை ஆதாரமாகக் கொண்டதே! இச் சமயங்களில் நாட்டின் மற்றைய பல்கலைக்கழக மாணவசமுதாயம் ஆதரவளித்தது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் மத்தியில் அக்காலங்களில் இனத்துவேஷம் வகுப்புவாதம் தலையெடுக்க எவரும் எதுவும் செய்ததாகப் புகார் கிளம்பியதில்லை.

பேராதனை குறிஞ்சிக் குமரனுக்கு நடந்துவரும் பூசையும் விழாவும் மாணவ சமுதாயத்தின் ஒற்றுமை வாழ்வுக்கு உதாரணமாக விருந்துவந்தது.

நாட்டில் இனக்கலவரம் வேகமான கட்டத்திலும் பேராதனை தமிழ்மாணவர், ஆசிரியர், ஊழியர்கள் தக்க பாதுகாப்பு பெற்றிருந்தது அண்மைக்கால வரலாறு.

இந்தப் பின்னணியில் இன்று ஏற்பட்ட குழப்பம் பெருஞ் சந்தேகத்துக்குரியது. தனிப்பட்ட குரோதம் விஷமிகளின் தலையீட்டால் திசைதிருப்பப்படுகிறதா?

'தரப்படுத்தல்' என்ற அநியாயமான பிரவேச முறை தலையெடுத்த காலத்திலும், அதற்கு ஆதாரமாக சில துண்டுப் பிரசுரங்கள் வெளிவந்ததும் அதனை எதிர்த்த திறமை அடிப்படையைத் தொடரவேண்டுமென்ற பிரசாரத்தை முறியடிக்கத் தமிழ் மாணவர்களுக்குச் 'சவால்' கடிதங்கள் எழுதப்பட்டதும் உண்மை. ஆனால் ஈற்றில் எவ்வித போட்டியையோ பிணக்கையோ அவை உருப்படுத்தமுடியவில்லை.

இன்றைய சிங்கள-தமிழ் மோதல் எவ்வாறு அரும்பியதென்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் பொறுப்புடன் ஆராய்ந்து அதனை முளையிற் கிள்ளிவிட வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

பிரச்னையைப் பெரிதுபடுத்தாது, அதேநேரம் பீதியடையக்கூடிய எவ்வித வதந்திக்கும் தூபமிடும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் கேட்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பேராதனை போகட்டும்! யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை வேகமாக விருத்தி செய்ய இதுவே தருணமென்று வாதாடுபவர் அறிவிலிகளாகவே கருதவேண்டும்.

பல்கலைக்கழகம் நாட்டின் அரசியல் பிரச்னைகளிலிருந்து முற்றாக விலகியிருக்கும் நிறுவனமல்ல! ஆனால் முக்கிய வேறுபாடு ஒன்று உண்டு.

நாட்டின் பல்கலைக்கழகம் என்ற விலாசம் நிலைத்திருக்க வேண்டுமானால் நாட்டின் எந்தச்சமூகத்தினரும், வெளிநாட்டு மாணவர் தாமும் அதிற் கல்வி கற்கும் உரிமையுடையவர்களாக வேண்டும், உண்மையில், வெறும் சொல்லிலல்ல.

இன, மொழி, மதவாதங்கள் பல்கலைக்கழக படலைக்குள் புகுந்து விடுமாயின் அங்கு நடைபெறும் கல்வி பின்கதவால் ஓட்டமெடுக்க நேரிடும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஒரு பிராந்தியவளாகமாயிருந்த போதும் நாட்டின் பல்கலைக்கழகங்களில் ஒன்றென்பதற்கு ஆட்சேபமில்லை. 1977ல் நிகழ்ந்த இனக்கலவரத்தில் பெரும் பாதுகாப்புடன் யாழ்ப்பாணத்திலிருந்த வெளியேறிய சிங்கள மாணவர்கள் இத்தருணத்தைப் பயன்படுத்தி இங்குதிரும்பாது தங்கள் பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களில் இடம்பெற்றது பகிரங்க ரகசியமென கருதப்படுகிறது.

எந்த நிலையிலும் தமிழ் மாணவர்களுக்கு போதிய பாதுகாப்பும், பல்கலைக்கழக சூழ்நிலையில் அமைதிவாழ்வும் நிர்வாகத்தால் நிலைநாட்ட முடியாவிட்டால் நாட்டின் கல்வி கெடுவதோடு, அரசுக்கு தீர்க்க முடியாத தொல்லைகள் அதிகரிக்கும்.

பல மாணவர்கள் பட்டப் படிப்பு முடித்து பரீட்சை எடுக்கும் தவணை இதுவாகையால் எவ்வித அச்சமுமின்றி பேராதனை திரும்புவதற்கு ஆவன செய்யவேண்டும்.

# வன்னி மாநகரின் கலை, கலாச்சார தனித்துவம்

பொ. சத்தியகீர்த்தி

தமிழன் எங்கெல்லாம் வாழ்கின்றானோ அங்கெல்லாம் சங்கம் அமைத்து தமிழ் வளர்த்தபெருமைக்குரியவன். சேர, சோழ, பாண்டியகாலம் தொடக்கம் இன்றுவரை காலத்திற்குக் காலம் தமிழன் வாழுகின்ற உலகநாடுகளிலெல்லாம் தமிழ் வளர்க்கப்பட்டு வருவதைக் காணலாம். இந்த வரிசையில் வன்னிமாவட்டங்களில் ஒன்றான முல்லைமாநகரில் தமிழ் ஆராய்ச்சிமாநாடு நடைபெற்று வருகிறது.

இம்மாநாடு பண்டாரவன்னியன் ஆட்சி செய்த இம் முல்லைமண்ணில் நடப்பது மிகவும் பாராட்டப்படவேண்டியதொன்றாகும். அத்துடன் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக்கிளைத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் வெறும் அரசியல் ரீதியில் இல்லாமல் அறிவியல் ரீதியில் நடத்தப்படுவதையிட்டு தமிழ் கூறும் நல்லுலகு பெருமிதமடைகின்றது. இம் மாநாட்டை வன்னிப்பிரதேசத்தில் நடத்துவதற்காக முன்வந்த தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளைத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கும் அவரைச் சார்ந்தோருக்கும் வன்னி மக்கள் தமது அளப்பரிய நன்றியை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

இம்மகாநாடு நடைபெற இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் வன்னிமாநகரின் சமூக, பொருளாதார, கலை கலாச்சார, புவியியல் சூழ்நிலையை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தி வைப்பது பொருத்தமுடையதாகும். 13-ம் நூற்றாண்டில் தான் வன்னிநாடு அரசியல் ரீதியாகச் சிறப்புற்றுத் தனது தனித்துவத்தை வெளிக்காட்டிய காலப்பகுதியாகுமென்றால் மிகையாகாது. அக்காலப் பகுதி தொடக்கம் இன்றுவரை இப்பகுதி மக்கள் விவசாயத்தை குறிப்பாக வேளாண்மைத்தொழிலை, தமதுமுக்கிய தொழிலாகக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். சேனைப் பயிர்ச்செய்கையையும், சிறு நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கையையும் மேற்கொண்டுவருகிறார்கள். அத்துடன் சாப் பாகுபாட்டைக் கொண்ட தொழில் அமைப்புக்களும் ஆங்காங்கே காணப்படுவதை அவதானிக்கலாம். வேட்டையாடுதலை ஒரு பொழுதுபோக்குத் தொழிலாகக்கொண்டு செய்துவருகின்றனர். மிக அண்மைக்காலத்தில் குடியேற்றத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டு வடபகுதி, தீவுப் பகுதி, மன்னாடு ஆகியவற்றிலிருந்து மக்கள் கொண்டுவரப்பட்டு இங்கு குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இப்பிரதேசத்தில் அமைந்துள்ள குடியிருப்புக்களின் பெரும்பாலானவை குளக் குடியிருப்புக்களே. மிக அண்மைக் காலம் வரை சந்தைக்குடியிருப்புக்களும், சந்திக்குடியிருப்புக்களும் காணப்படுகின்றன. இப்பிரதேச மக்கள் ஆரம்பகாலத்தில் சுயதேவைப் பொருளாதார அமைப்பை உடையவர்களாகக் காணப்பட்டார்கள். நாளடைவில் சனத்தொகை அதிகரிக்க அதிகரிக்க சுயதேவைப் பொருளாதார அமைப்பானது சந்தைப் பொருளாதார அமைப்பாக மாற்றம் அடைந்திருப்பதைக் காணலாம். இப் பிரதேசத்தில் நிலவுடைமைச் சமுதாயத்தின் சாயல் காணப்பட்ட போதும் முற்றுமுழுதான நிலவுடைமைச் சமுதாயத்தைநாம் காணமுடியாது. நிலப்பங்கீடானது குடியேற்றத்திட்டங்களைப் பொறுத்தவரை சமனாகவுள்ள போதும், பழைய குடியிருப்புக்களில் ஏற்றத்தாழ்வு காணப்படுவதை இன்றும் காணலாம்.

இப்பிரதேச மக்களின் கல்வி வாய்ப்புக்களைப் பொறுத்தமட்டில் ஆரம்பகாலத்தில் மிகக் குறைந்த வீதத்தினரே உயர்கல்வியைப் பெற்றார்கள். இவ்வுயர்கல்வி பெற்றவர்கள் யாரென்றால், பிரித்தானிய ஆட்சிக்காலத்திற் செல்வாக்குப்பெற்றிருந்த உடையார், முதலியார், விதானையார் ஆகியோரின் பிள்ளைகளாகவே இருந்தனர். ஆனால் இன்று சதாரண விவசாயிகளின் பிள்ளைகள் பலர் பல்கலைக்கழகம் சென்று பல துறைகளில்

[5-ம் பக்கம் பார்க்க]

# தொல்காப்பியம் பொருளதிகாரம்

முத்திரையில் உலாவந்த வித்தகர்: 6

க. சி. குலரத்தினம்

தாமோதரம் பிள்ளையவர்கள் 1883ஆம் ஆண்டில் இரு பெரும் நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பின், கும்பகோணத்தில் வாழ்ந்துவந்தார். அவர் முன்னர் 1871ஆம் ஆண்டில் B.L. பரீட்சையில் சித்தியெய்தியவராகையாலும், தருக்கரீதியாக வாதப்பிரதிவாதஞ் செய்யக்கூடியவராகையாலும் நியாயதுரந்தரர் தொழிலை மேற்கொண்டு; உபகாரச் சம்பளத்தைக் கொண்டு குடும்பத்தை நடத்தி, நியாயதுரந்தரராக உழைத்த பணத்தைத் தமிழ்த் தொண்டிற்குச் செலவிட்டுவந்தார்.

இவ்வாறாக, அவர் மனைவியர் இருதாரத்தவரையும் மக்கள் சிலரையும் இழந்தநிலையில் பொன்னம்மாள் என்னும் புத்திரியையும் இழந்து வருந்தினார். இவ்வருத்தங்களை மறப்பதற்கு அவர் தமிழ் ஏடுகளில் கருத்தூன்றினாரென்றும் கருதலாம்.

தொல்காப்பிய நூலின் எழுத்ததிகாரத்தை முன்னர் மழவை மகாலிங்கையரும், சொல்லதிகாரத்தைத் தாமும் வெளியிட்டமையால் தொடர்ந்து பொருளதிகாரத்தை நச்சினார்க்கினியர் உரையோடு வெளியிட விரும்பினார். அதற்காக வேண்டிய ஏடுகளைத் தேடித் திரட்டிவர அவருக்குப் போதிய வசதியும் நேரமும் இருந்தன.

எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டென்றுணர்ந்த பிள்ளையவர்களுக்குப் பேராதரவு நல்கியவர் திருவாவடுதுறை யாதீன மகா சந்நிதானம் அவர்களேயாவர். தமது மடத்துப் பிரதிகள் எல்லாவற்றையும் பிள்ளையவர்கள் பார்வைக்கு அனுப்பி வைத்தார்கள். இன்னும் பலரிடம் இருந்த ஏடுகளையும் வாங்கி யனுப்பியதோடு அச்சில் வெளிவரும் பிரதிகள் பலவற்றை வாங்கிக்கொள்ளவும் கருணைகாட்டியருளினார்கள்.

பிள்ளையவர்களின் பிறந்தகமாய யாழ்ப்பாணத்துப் பிரமுகர்களும் ஏடுகள் அனுப்பினார்கள். நாவலரவர்களின் மாணாக்கர் சதாசிவம்பிள்ளையும் தமது ஏட்டை அனுப்பினார். இவ்வாறாகப் பிள்ளையவர்களிடம் பன்னிரண்டு ஏடுகள் வந்து குவிந்தன.

பன்னிரண்டு ஏடுகளை ஒப்பு நோக்கியும் ஐயத்துக்கிடமான பகுதிகளை ஆராய்வதற்குப்பின்னவர்கள் அறிவாளிகளிடம் அலைந்து திரிந்தார். தாம்பட்ட துன்பங்களையும், தமக்கு ஏடுகள் கொடுத்துதவிய அன்பர்கள் ஆதரவையும் பிள்ளையவர்கள் தமது முகவுரையில் எழுதியுள்ளார். பொருளதிகாரத்தைப் பரிசோதிப்பதற்குத் தகுதியானோர் யாவர் என்பது பற்றிப் பிள்ளையவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

"பஞ்சகாவியம், பஞ்சலக்கியம், அகநானூறு, புறநானூறு, நற்றிணை, கலித்தொகை, நெடுந்தொகை, குறுந்தொகை, திணை மரபு, செய்யுட்டொகை, கல்லாடம், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், தகடூர் யாத்திரை, பெருந்தேவனார் பாரதம், பதினெண் கீழ்க்கணக்கு, வெண்பாமாலை என்று இன்னோரன்ன இலக்கியங்களும்; புறப்பொருட் பன்னிருபடலம், வையாபிகம், வாய்ப்பியம், அவிநயம், காக்கைபாடினியம், நற்றத்தம், வாமனம், பல்காயம், பல்காப்பியம் என்றின்னோரன்ன இலக்கணங்களும் முற்றக்கற்று வல்லாரே இந்நூலைப் பரிசோதிப்பதற்கு அருகராவர்."

பிள்ளையவர்கள் கும்பகோணத்திலிருந்தே 1885ஆம் ஆண்டில் - பார்த்திப வருடம் ஆவணி மாதத்தில் சென்னை ஸ்கொட்டின் அச்சியந்திரசாலையில் அச்சேற்றி வெளியிட்டார்கள்.

பிள்ளையவர்கள் தமது பொருளதிகாரப் பதிப்புரையில் தம் தமிழாசிரியர் சுன்னாகம் முத்துக்குமார கவிராயருக்கு வணக்கம் கூறும் சாற்பு பெரிது.

......கற்றறிவில்லாக்
கடையனேன் றனக்கு
நற்றமிழ் கொளுத்திய
நாவலன் சுன்னை
முத்துக் குமார
வித்தக னடியினை
சித்தந் திருத்திமற்
றுத்தம புலவர்
அடிக்கம லங்களென்
முடிக்கணி கொடுக்கநின்று
அடியேன் கூறுவது
ஒன்றுண்டு......

பிள்ளையவர்கள் பொருளதிகாரம் பதித்த பின் தமிழ்நாட்டில் ரா. ராகவையங்கார் அவர்கள், பவானந்தம் பிள்ளையவர்கள், கனகசபாபதிப் பிள்ளையவர்கள் முதலானோர் அதனைப் பதித்துள்ளார்கள்.

ஈழநாட்டில் வித்துவான் கணேசையர் அவர்கள் அடிக்குறிப்புகளோடு தொல்காப்பியம் முழுவதையும் ஈழகேசரி பொன்னையா அவர்களின் திருமகள் அச்சகத்தில் அழகாகவெளியிட்டுள்ளார். பொருளதிகாரத்தின் பருமன் காரணமாக அதனை இரு பகுதிகளாக வெளியிட்டுள்ளார்.

[5ம் பக்கம் பார்க்க]

## அரியாலை வேளாங்கண்ணி திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். அரியாலை கிழக்கு அன்னை வேளாங்கண்ணி திருவிழா இன்றும் நாளையும் நடைபெறவிருக்கிறது. ஆரம்ப நாளான இன்று மாலை திருப்பலியும், நற்கருணைப் பவனியும் இடம் பெற்று. நாளைகாலை திருவிழாப்பூசைப் பலியும் திருச்சுருபப் பவனியும் இடம் பெறும். (சூ)

# 'அரசியல்தீர்வு ஏற்படாவிட்டால் அயர்லாந்து நிலைமைஉருவாகும்' அனில் முனசிங்கா எச்சரிக்கை

(கொழும்பு)

'தமிழ் மக்களின் பிரச்னை பெரும் பிச்சினை, அப்பிரச்னைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காணப்படவேண்டும்'

அரசியல் தீர்வு என்பது இந்த நாட்டை பிரிப்பது என்பதல்ல. இந்த நாட்டை இரண்டாகப் பிரிப்பதை நாம் வன்மையாக எதிர்க்கின்றோம்."

மத்துகமவின் புதிய எம். பி. திரு. அனில் முனசிங்கா பாராளுமன்றத்தில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:

'தமிழ் மக்களின் பிரச்னைக்கு அரசியல் ரீதியிலான தீர்வு காணப்படாவிடின் அயர்லாந்தில் ஏற்பட்ட நிலை இங்கும் ஏற்படும். 77-ம் ஆண்டு உங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி தமிழ் மக்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டினால் நாமும் ஒத்துழைப்பு வழங்கத் தயார்.

'இராணுவம் ஒரு பிரதேசத்தை ஆட்சிசெய்யச் சென்றால் அங்கு நெருக்கடிகள் நிலவுவது வழமை. அது போலவே 1971-ல் இங்கு ஒரு சிவில் யுத்தம் நிலை இருந்த போதும் இராணுவத்தினர் மனிதாபிமானமற்ற முறையில் நடந்திருக்கின்றனர்.

16 ஆண்டுகளுக்கு முன் 11 ஆண்டுகள் நான் இந்தசபையில் அங்கத்தவராக இருந்திருக்கிறேன். ஆனால் இன்று போல் எனது அனுபவத்தில் என்றுமே குறுக்கீடுகளும் இடையூறுகளும் இருந்ததில்" என்று அவர் கூறினர்.

### கம்பஹா எம். பி. கருத்து

கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் கூறியதாவது:

"இந்த நாட்டில் பயங்கரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கையை மேற்கொள்ளவும். எமது ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவுக்கு நடந்துமுடிந்த இடைத் தேர்தலில் மக்கள் ஆணைவழங்கியுள்ளனர். எனவே ஜனாதிபதிக்கு நாம் எல்லோரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

'வடக்கில் தமிழ் பயங்கரவாதிகள் அப்பாவித் தமிழ் மக்களையும் இராணுவத்தினரையும் பொலிசாரையும் சுட்டுக் கொல்கிறார்கள்.

'வடக்கில் மேற்கொள்ளப்படும் பயங்கரவாத நடவடிக்கைகள் நாட்டில் குழப்ப நிலையை ஏற்படுத்தும், என இளைஞர்களை நான் எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன்.

---

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ருத்ரோத்காரி வருஷம் வைகாசி மாதம் 15-ந் திகதி (29-5-83) ஞாயிற்றுக்கிழமை பகல் 11-16 மணிமுதல் 12-20 மணிவரை வரும் சிங்கலக்கின சுபமுகூர்த்தத்தில்,

| | |
|---|---|
| எமது கனிஷ்ட புத்திரன்<br>திருநிறைசெல்வன்<br>வேலாயுதம் B. Sc. (Cey.)<br>[ஆசிரியர், கொக்குவில் இந்துக்கல்லூரி]<br>அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி<br>திருநிறைசெல்வி<br>ரவீந்திராதேவி<br>அவர்களுக்கும் |

திருமாங்கல்யதாரணம் செய்ய அம்பாள் அருள்கைகூடி மணமகள் இல்லத்தில் இனிது நடைபெற இருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்களும் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகிறோம்.

முக்கிய குறிப்பு:

தவறுதல் காரணமாக தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் தயவு செய்து இதையே அழைப்பிதழாக ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்.

த. கந்தப்பிள்ளையும் குடும்பத்தினரும்
594, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
9-5-83

தி. நாகரத்தினம் தம்பதிகள்
(உரிமையாளர் சாந்தி அச்சகம் யாழ்ப்பாணம்)
958/26, கே. கே. எஸ். றோட்,
தலையாழி, யாழ்ப்பாணம்.

(7377)


## யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு

இன்றும் நாளையும்
காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை
திறந்திருக்கும்

# ஆர்ப்பிக்கோ காட்சியறைகள்

★ விசேட கழிவு விலையில் பொருட்கள் ★

**உருக்குத் தளபாடங்கள் :**
கதிரைகள், மேசைகள், கட்டில்கள், வரவேற்பறைத் தளபாடங்கள், தொலைபேசித் தாங்கிகள், ஆடைஅலுமாரிகள், பீங்கான் அலுமாரிகள் (Chinaware Cabinets), கம்பி ஸ்ரூல்கள் (Bar Stools) இன்னும் பல . . . ரூ. 225/——ரூ. 5000/- வரை

**விளையாட்டு உபகரணங்கள் :**
கிரிக்கெட்—துடுப்புகள், பந்து, துடுப்படி கையுறை, விக்கட்காப்புக் கையுறைகள், கால்காப்பு மட்டைகள், உதைபந்தாட்ட பந்துகள், கரபந்தாட்ட பந்துகள், ஹாக்கி-துடுப்புகள், பந்துகள், கால்காப்பு மட்டைகள். . . ரூ. 15/——ரூ. 825/- வரை

**காரியாலய தளபாடங்கள் :**
மேசைகள், கதிரைகள், (நிர்வாகி, லிகிதர், தட்டெழுத்தாளர்களுக்குரியது) கோவைகள் வைக்கும் அலுமாரி, சாதாரண அலுமாரிகள். . . ரூ. 975/——ரூ. 4250 வரை

**ரெஜிபோம் (Regiform Sheets) ஐஸ்கிறீம் பாதுகாப்பு பெட்டகங்கள்...** ரூ. 9/——ரூ. 200/- வரை

**ஆர்ப்பிக்கோ மெத்தைகள் :**
ரூ. 140/——ரூ. 1100/- வரை

**பிளாஸ்டிக் வீட்டுப் பாவனைப் பொருட்கள் :**
பேசின்கள், வாளிகள், சாடிகள், கைகழுவும் பாத்திரங்கள், தட்டங்கள், தம்ளர்கள், குப்பைத்தொட்டிகள், சுற்றுலா கூடைகள், கொள்கலன்கள், , . ரூ. 4/-——ரூ. 98/ வரை

**5% கழிவு**

ட்ரான்ஸ்லங்கா மார்கெட்டிங் லிமிட்.


## தொல்காப்பிய

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ்நாட்டில் மலிவுப் பதிப்பு வரிசையில் புலியூர்க் கேசியன் பதிப்பிலும் பிள்ளையவர்கள் புகழ் மணக்கிறது.

"அரும் பெரும் இந்நூலை அச்சியற்றிக் காணும் செயற்கரிய பெரும் பணியிலே முதற்கண் சிறப்புறக்கவனஞ்செலுத்தியவர், உயர் திரு சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களாவர். மற்றும், ஆறுமுகநாவலர் அவர்களும், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்களும், பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்களும், யாழ்ப்பாணத்து கணேசையர் அவர்களும் பிறருமாவர்."

(முற்றும்)

## வன்னிமாநகரின்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

கல்விபயின்று வருகிறார்கள்.

இப்பிரதேசத்தில் ஏட்டுப் படிப்பு இன்றும் வற்றுப்பளை கண்ணகி அம்மன் கோயிலில் படிக்கப்பட்டு வருகிறது இவற்றைவிடப் பல வாய்மொழிப் பாடல்கள், பழமொழிகள், நாட்டுக்கூத்துக்கள், ஊஞ்சற் பாட்டுக்கள், நொடிகள் இப்பிரதேசத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளதைக்காணலாம்.

இப்பிரதேசம் தனக்கெனப் பல மொழிவழக்குகளையும் கொண்டு அமைந்துள்ளது இம்மொழி வாக்குகளிற் பல வேளாண்மைத் தொழிலில் உபயோகப்படுத்தப்படுபவையாகும். இவ்வழக்குகளை ஏனைய பிரதேச மக்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். உதாரணமாக:-

குளம்—கனகு
கரம்—நெல்லை
பொலிக்கொடி — வைக்கோல்
பெருவாயல்—மடகம்
நடைபன்—எருமைமாடு
களம்—நெல்மிதிக்குமிடம்

இவ்வாறு பலவற்றைக் குறிப்பிடலாம். வன்னி மாவட்டங்களான வவுனியா முல்லைத்தீவுப் பிரதேசங்களில் இவ்வழக்குகள் மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுவதைக் காணலாம். உதாரணமாக முதல் முதல் நெல் வெட்டுவதை வவுனியா மாவட்ட மக்கள் அருவி வெட்டல் என்றும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் 'அயல் திறத்தல்' என அழைப்பார்கள்.

### உமாமகேஸ்வரனை

# விடுதலை செய்யும்படி இந்திராவிடம் வேண்டுகோள்

சென்னை, மே. 27

சென்னையில் தடுப்புக்காவலில் இருந்துவரும் தீவிரவாத இலங்கை இளைஞரான உமாமகேஸ்வரனை விடுதலை செய்யும் விடயத்தில் தலையிடும்படி பிரதமர் திருமதி இந்திரா காந்தி கேட்கப்பட்டுள்ளார்.

உலகத்தமிழ் பண்பாட்டுக் கழக பொதுச்செயலாளர் திரு. தமிழ்மன்னன் திருமதி காந்தி அண்மையில் சென்னை வந்திருந்தபோது அவரிடம் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

திரு. தமிழ்மன்னன், காவலிலுள்ள உமாமகேஸ்வரன் ஈழத்தமிழ் மக்களின் விடுதலை வீரர் என்று பிரதமர் காந்தியிடம் தெரிவித்துள்ளார்.

### "தமிழர்களைத் தாக்கியவர்களுக்கு அன்று

# பாதுகாப்பளித்த படையினர் இன்று நேரடியாகத் தாக்குகின்றனர்"

### சமநீதி இயக்கம் கண்டனம்

[கிளிநொச்சி]

இராணுவத்தினரை வடக்கில் இருந்து வெளியேற்றுமாறும், இராணுவ அட்டகாசங்களுக்கு முடிவுகட்டுமாறும் கோரும் அறிக்கை ஒன்றை சமநீதி இயக்கம் வெளியிட்டுள்ளது.

சமநீதி இயக்கத்தின் சார்பில் இவ்வியக்க அமைப்பாளர்களில் ஒருவரான திரு. வே. சண்முகராஜா பிரஸ்தாப அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:- ஜனநாயகரீதியில் நாட்டில் தேர்தல்களை நடாத்தி மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிப்பதாகக் கூறிக்கொள்ளும் இன்றைய அரசு 77-ம் ஆண்டில் பதவிக்கு வந்தவுடன் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள்மீது வன்செயலைக் கட்டவிழ்த்து, அடித்து வீடுகளைக் கொளுத்தி உடமைகளை நாசமாக்கி காட்டுத்தர்பாரைத் தொடக்கி வைத்தது. அது படிப்பித்துக் கொடுத்த பாடத்தை அந்த இன மக்கள் 78-ம் ஆண்டு இனரீதியில் தமிழ்மக்கள்மீது தாக்குதல் நடத்தி தமிழர்களின் வீடுகளையும் கடைகளையும் எரித்து உடமைகளைக் கொள்ளையடித்துத் தமிழ் மக்களை உயிரோடு எரித்து வெறியாட்டத்தை ஆடிமுடித்தனர்.

"இந்த அநியாய செயலுக்குக் காரணகர்த்தாக்களாக இருந்தவர்களுக்கு நாட்டுப் பாதுகாப்புப் படைகளான இராணுவமும், பொலிசும் பாதுகாப்பாக இருந்தது. தொடர்ந்து 81-ம் ஆண்டு மீண்டும் தமிழ் மக்கள் மீது தேர்தல் திருவிழாவாக பழைய பாணியிலேயே இனக்கொலை திட்டமிட்டே நடத்தப்பட்டது. இப்போது இராணுவமே நேரடியாக இறங்கித் தமிழ் மக்களது பிரதேசமான யாழ். பிரதேச வர்த்தக நிலையங்களை அடித்து நொருக்கி எரித்து அட்டகாசம் புரிந்ததோடு தமிழ் மக்களின் அறிவு வளர்ச்சிக்கு ஊற்றாக விளங்கிக்கொண்டிருந்த உலகிலே சிறந்த நூல் நிலையங்களில் ஒன்றான யாழ்ப்பாண நூல் நிலையம் ஆயுதப் படையினரால் திட்டமிட்டுத் தீயிட்டுச் சாம்பலாக்கப்பட்டது.

"தொடர்ந்து பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பெயரில் இளைஞர்களும், அறிஞர்களும் சமூக சேவையாளர்களும் பெண்மணிகளும் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் சித்திரவதைக்காளாக்கப்பட்டும். சிலர் கொல்லப்பட்டும் பலரது கதை மண்ணோடு மண்ணாக மறைக்கப்பட்டுமிவிட்டது.

"மீண்டும் இப்போது ஜனநாயகத்தின் பெயரில் தேர்தல் நடத்தப்பட்டு தமிழ் பிரதேசம் எரிக்கப்பட்டும் மக்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டும் கொலையும் கொள்ளையுமாக ஆயுதப்படையினரால் ஆடிமுடிக்கப்பட்டுவிட்டது.

"ஆயுதப்படையினரால் ஒன்றும் அறியாத அப்பாவி மக்கள் வீடு, உடமை, உயிர்களைத் துறக்கவும் ரயில் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்யமுடியாமலும் வீதியில் சுதந்திரமாக நடந்து செல்ல முடியாத அளவிற்கு அட்டகாசம் பெருகிவருகிறது.

"இராணுவப் படையினரின் அக்கிரமச்செயல்களை சமநீதி இயக்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் ஆயுதப்படையினரை வடக்கிலிருந்து அகற்ற வேண்டும்." [க]

# ஈராக்கினுள் துருக்கி பிரவேசம்!

புதுடில்லி, மே, 27

ஈராக்கினுள் அதன் வடக்கு மலைப் பகுதியூடாக சுமார் இரண்டாயிரம் துருக்கிய துருப்புகள் முப்பது கிலோ மீட்டர்கள் தூரம்வரை பிரவேசித்துள்ளன,

ஈராக்கில் இருந்துவரும் 'குர்தீஷ்' கெரில்லாக்களின் நடவடிக்கைகளை முறியடிக்கும்வகையிலேயே துருக்கித் துருப்புகள் இவ்வாறு ஈராக்கினுள் புகுந்துள்ளன.

துருக்கித் துருப்புக்களின் இப்பிரவேசம்பற்றி அறிவிக்கப்படுகின்றபோதிலும் துருக்கியின் தலைநகரான அங்காராவிலிருந்து இதுபற்றி எதுவும் உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

ஈராக்கின் வடக்குப் பகுதியிலேயே துருக்கிநாட்டு எல்லை காணப்படுகிறது. இவ்வெல்லைப் பகுதியில் துருக்கித் துருப்புகளுக்கும், 'குர்தீஷ்' கெரில்லாக்களுக்குமிடையே சிறு சிறு சச்சரவுகள் அடிக்கடி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது (கி)

## கிராமோதய சபை கண்டனம்

(நெடுந்தீவு)

யாழ். கந்தர்மடம் இராணுவ அட்டூழியத்திற்குக் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் நெடுந்தீவு முன்னேற்றக் கழகத் தலைவரால் மத்தி கிராமோதய சபையில் சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்கு கிராமோதயசபைத் தலைவர் திரு. அ. கணேசலிங்கம் தலைமை வகித்தார். (நி)

### கத்தோலிக்க அதிபரை

# நியமிக்குமாறுகோரி மாணவர் பகிஷ்கரிப்பு!

[மன்னார்]

பேசாலை - தள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் கத்தோலிக்க மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை ஆரம்பமான இப் பகிஷ்கரிப்பு பெற்றோரின் ஆதரவுடன் தொடர்ந்து நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேசாலை - தள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபராக முஸ்லீம் ஆசிரியர் ஒருவரை நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டே கத்தோலிக்க மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

90 சதவீதம் கத்தோலிக்க மாணவர்கள் கல்வி கற்கும் தள்ளுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் அதிபராக கத்தோலிக்க ஆசிரியரையே நியமிக்க வேண்டும் எனவும், தற்போது அதிபராக நியமிக்கப்பட்டுள்ள முஸ்லீம் ஆசிரியரை இடமாற்றம் செய்யுமாறும் மாணவர்களின் பெற்றோர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டிருந்தனர்.

பெற்றோரின் இக்கோரிக்கை நிறைவேற்றப் படாததால் மாணவர்கள் வகுப்புக்களைப் பகிஷ்கரிப்பதில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை பேசாலை தள்ளுக்குடியிருப்பு கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் அதிபராக கத்தோலிக்க ஆசிரியரையே நியமிக்குமாறு பேசாலை கிராமோதய சபை மூதூர் எம். பியும், மன்னார் மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். ஈ. எச். மஹ்சாப், மன்னார் எம். பி. திரு. பி. எஸ். சூசைதாசன் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை தலைவர் திரு. பி. எம். செபமாலை, மன்னார் மாவட்ட கல்விப்பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் ஆகியோருக்கு அவசரத் தந்திகளை அனுப்பி வைத்துள்ளது. [க]

### றீகனின் 'எம். எக்ஸ்.'

# ஏவுகணைகள்நிறுவும்செலவு: பாராளுமன்றம் அனுமதி

நியூயோர்க், மே. 27

ஐரோப்பாவில் நூறு 'எம் எக்ஸ்' ஏவுகணைகளை நிறுவுதற்கென ஜனாதிபதி றீகனால் கோரப்பட்டிருந்த நிதியை வழங்க அமெரிக்கா பாராளுமன்றம் அனுமதிவழங்கியுள்ளது.

இதனையடுத்து 65 கோடியே 50 லட்சம் டாலர்கள் இந்த ஏவுகணைகளை நிர்மாணிப்பதற்கென வழங்கப்படவுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரதிநிதிகள் சபை றீகனின் இக்கோரிக்கைக்குச் சம்மதம் வழங்கியிருந்தது. இதனைத் தொடர்ந்து கடந்த புதன்கிழமை செனட்சபையும் இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டது. பின்னர் மீண்டும்முறைப்படி இக்கோரிக்கை பிரதிநிதிகள் சபைக்கு அனுப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. [கி]

## தி.மு.க. தலைவராக மீண்டும் கருணாநிதி

சென்னை மே 27

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவராக திரு. மு. கருணாநிதி மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்று கோயம்புத்தூரில் நடந்த இக்கட்சிப் பொதுக்கூட்டத்திலேயே இத்தெரிவு இடம்பெற்றது. திரு மு. கருணாநிதி தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. [கி]


உங்கள் குடும்பத்தினர் உணவை விரும்பிச் சுவைப்பதன் இரகசியம் அஜி-நொ-மோட்டோ!




உங்கள் சமையலை குடும்பத்திலுள்ள அனைவரும் ஆவலுடன் உண்ண வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இன்றே, அஜி-நொ- மோட்டோவின் துணையை நாடுங்கள். அஜி-நொ-மோட்டோ நீங்கள் சமைக்கும் உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குகின்றது. கறி, சோறு, சம்பல், சூப் முதலிய எவ்வகை உணவிலும் சேர்க்கலாம். கரும்பு, பீட்றூட், மரவள்ளி ஆகியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து பெறப்படும் அஜி-நொ-மோட்டோவை 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்: கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு

விலை: ரூ.1/20 ல் இருந்து

அஜி-நொ-மோட்டோ®

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0005

ஹரன் (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
M.G.R.—சரோஜாதேவி
தாயைக்காத்த
தனயன்
புதிய பிரதி

றீகல் (யாழ். நகர்)
கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி – சுமித்திரா
சங்கிலி

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி 4-15 7-00
சனி, ஞாயிறு 1-30
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
எங்கவீட்டுப்பிள்ளை

ராஜா (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
கடல் மீன்கள்
30-31
ஜெய்சங்கர் ஜெய்சித்திரா
உங்கள் விருப்பம்
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர்– சரோஜாதேவி
அன்பே வா

லிடோ (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
ராமராவ்
சம்பூர்ண
ராமாயணம்

மனோகரா தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
வாழ்வே மாயம் (ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
ROGER MOORE in
MOON RAKER
James Bond 007

ராணி தினசரி 10-30, 2-00, 6-00, 9-30,
(யாழ். நகர்)
கமலகாசன் - அம்பிகா
சகல கலா வல்லவன்

வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ். நகர்)
A soldier of fortune and his trained assistants rescue a girl held captive in a Remote Island. Action packed Karate Film.
FORCE FIVE
(Adults Only)
30 and 31 SNAKE QUEEN

ஹவுஸ்புல்! 3-வது ஹவுஸ்புல் வாரம்
சாந்தி (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30, 9-45
வெள்ளிவிழா வண்ண ஓவியம்
கதையால்... பாடல்களால்... நடிப்பால்...
பட்டிப்பிடிப்பால் உயர்ந்த தியாகம்
ப்ரஸாஜியின் சிவாஜி லட்சுமி மேஜர்
தியாகம் தேங்காய் நாகேஷ்
மனோரமா
சுஸ்ட்மென்கலர் கே. ராகசாமி
இளையராஜா விஜயன்

தெ. ப. பொ. உ; வி. கூ. சங்கங்களை

# பனந்தும்பு உற்பத்தியில் ஈடுபடுத்த நடவடிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல தெங்கு-பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களையும் பனந்தும்பு உற்பத்தியில் ஈடுபடுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பனம்பொருள் அபிவிருத்திச்சபை மேற்கொண்டு வருகிறது. இதற்கு முன்னோடியாகத் தற்போது இலங்கை அரசின் பனை அபிவிருத்தி ஆலோசகராகப் பனம் பொருள் அபிவிருத்திச் சபையில் ஆறுமாதகாலத்திற்குக் கடமை ஏற்றுள்ள இந்திய பனைத் தொழில் நிபுணர் டாக்டர் கே. சம்பந்தத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இம்மாவட்டத்திலுள்ள சகல தெங்குபனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களும் பனந்தும்பு உற்பத்தியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இப் பனந்தும்பு உற்பத்தியைக் கிராமிய மட்டத்தில் குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் வகையில் கருத்தரங்குகளும், செய்முறை பயிற்சிகளும் நடாத்தபட இருக்கின்றன.

## கிளிநொச்சி....

[2ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. கே. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, மாவட்ட சபை உறுப்பினர் திரு. இ. கிருஷ்ணராசா ஆகியோரும் கலந்து கொண்ட இக் கருத்தரங்கு கனிஷ்டமகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்து கொண்ட பலரும் அத்துமீறி குடியேறியோரின் காணிகளுக்கும் உத்தரவுப் பத்திரம் வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விட்டனர். (ஈ)

## சின்மய இழந்த நறுமலர்

உருவில் மங்கிகையாகவும் உள்ளத்தில் கமலமாகவும் வாழ்ந்தவர் சுதுமலை சின்மய பாரதி வித்தியாசாலை ஆசிரியை திருமதி மல்லிகாதேவி பண்டிதவரதன். நல்லாசிரியருக்குரிய சகல இலட்சணங்களும் நிறைவுறப் பெற்ற திருமதி மல்லிகாதேவி பண்டிதவரதன் தமது உழைப்பால், தன்னலமற்ற சேவையால் தானும் உயர்ந்து தம்முடைய குடும்பத்தையும் உயர்த்தி அதே வேளையில் பல்லாயிரவர் உள்ளங்களிலும் சேவையின் சின்னமாக இடம்பெற்றுவிட்டார்.

திருமதி மல்லிகாதேவி பண்டிதவரதனின் சேவையை பண்டாரவளை, சுதுமலை முதலாம் இடங்கள் பெற்றது போல் புகழ்பூத்த உருப்பிராய்சைவத் தமிழ் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டது பெருமைப் படக்கூடியதொருவிடயமாகும். அன்னார் இங்கு கற்பித்த ஆண்டுகள் சிலவே. இந்தச்சிலஆண்டுகளில் அவர் இத்துறையில் ஆற்றிய வியத்தகு சேவை களேராவ.

அவரது வாழ்க்கைச்சுற்றோட்டத்தில் அன்னாரின் பொன் விழாவைக் கொண்டாடத் துடித்தவர்கள் அன்னாரின் திருமண வாழ்க்கையின் வெள்ளி விழாவை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டிருந்த குடும்பத்தினர் அவரது மரணவிழாவையே சந்திக்க வேண்டியதாயிற்று. ''ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டொன்றாகும்'' என்றார் ஔவையார். இதனை நினைந்து அமைதி பெறுவோம்.

அ. பஞ்சாட்சரம்

# அரியாலை கிழக்கு வேளாங்கண்ணி மாதா



நீண்டு கிடக்கும் வெண் மணற்பரப்பு, கடலலை ஓசை, அசையும் பனைகளின் தென்னைகளின் சலசலப்பு, மீனவர் குடிகள், விவசாயக்குடிமைகள். ஏழைகள் சுற்றம் இந்தப்பனைப்புலத்தில் பள்ளிகொண்டெழுந்தருளி இருப்பவள்தான் யாழ். அரியாலை கிழக்குக் கிராம அன்னை வேளாங்கண்ணி. அமைதி தவழும் அவ்விடத்திற்கு அமைதியின்றி வருபவர்க்கு அவளே அமைதியானாள். கேட்பதை கொடுப்பாள். நல்வழிகாட்டுவாள், நம்பினோர்க்கு நலமளிப்பாள். வைத்தியம் தீர்க்கா நோய் களைத் தீர்ப்பாள். பைத்திய மனதுடைய பக்தர்க்கு பித்துத்தீர்த்து முத்தி வழங்கும் சக்தியுடையாள். சுருங்கச் சொன்னால் இறையருளினை அள்ளி வழங்கும் அன்புத் தாயாக அங்கே அமைந்திருக்கிறாள் அன்னை வேளாங்கண்ணி.

இங்கே தமிழகத்து அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆரோக்கிய அன்னையின் திருவுருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இத்திருப்பதியின் வருடாந்த மகோற்சவம் வைகாசித் திங்களின் 29-ம் நன்னாளில் பெருவிழாவாக மலர்கிறது. அன்னையின் அருள்வேண்டி சனி மே 28 மாலை ஆராதனைகள் பி.ப. 5 மணிக்கு கிறிஸ்துவின் மறை உடலாம் நற்கருணைக்கு விசேட வழிபாடு நடைபெறும். 29-ம் திகதி ஞாயிறு காலை அன்னையின் பக்தர்கள் ஒரே இறைகுலமாய்த் திருநாட் திருப்பலியைக் காலை 7 மணிக்கு ஒப்புக்கொடுப்பர். அதன்பின்னர் அருள்மொழி அன்னையின் எழில்பொழிக் திருவுருவம் திருவுலாக் கொண்டு செல்லப்படும்.

பக்தர்கள் வசதிகருதி வைகாசி 28 சனி மாலை 4 மணிக்கும் 29 காலை 6-30மணிக்கும் யாழ் மத்திய பேருந்து நிலையத்திலிருந்து விசேட பஸ் சேவைகள் சுண்டிக்குளி யுவானியார் கலயம், கொழும்புத்துறை ஊடாக நடைபெறஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

--பற்றிமாகரன்

## மன்னார் மாவட்ட பாடசாலைகளின் கண்காட்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டபாடசாலைகளுக்கான கண்காட்சி ஜூன் மாதம் 2ம், 3ம் திகதிகளில் நடைபெறும்.

மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி பி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் மேற்கண்ட முடிவுஎடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்டபாடசாலைகள் கலந்துகொள்ளும் இக் கண்காட்சியில் கல்விச்சேவையின் மேலதிக செயலாளர் திரு. மகிந்தரண வீர பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இக்கண்காட்சியின் போது மனையியல், சுகாதாரம், அழகியல், விஞ்ஞானம், தொழில் நுட்பம்கணிதம், கலைபோன்ற பல துறைகளுடன் சேர்ந்த பொருட்கள் கண்காட்சிக்கு வைக்கப்படும். (ஈ)

## வைத்திய அதிகாரி நியமிக்க நடவடிக்கை

(மன்னார்)

தலைமன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலையில் தற்போது நிலவிவரும் மாவட்ட வைத்திய அதிகாரி இல்லாக்குறை விரைவில் தீர்த்துவைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. பி எம். செபமாலை தலைமன்னார் கிராமோதயசபைத் தலைவர் திரு. அல்பிறட் சிவாவிடம் தெரிவித்துள்ளார்.

## சம்பந்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் குருபூசை ஆனைக்கோட்டை ஸ்ரீ வரத விக்கினேஸ்வரர் ஆலயத்தில் நாளை மாலை நடைபெறவுள்ளது. இக்குரு பூசையில் 'ஞானக் குழந்தை' என்னும் விடயம் பற்றி சிவ மகாலிங்கம் சொற்பொழிவாற்றுவார். (கு)

புலோலி ப. நோ. கூ. சங்கத்தின்

# தொழில் பரப்பிற்குள் கட்டைவேலி ப. நோ. கூ. சங்கத்தின் தேநீர்ச்சாலை!

## கூட்டுறவு உதவி ஆணையாளருக்குப் புகார்

(புலோலி)

புலோலி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்கும் கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்திற்குமிடையே பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது. புலோலி ப. நோ. கூ. சங்க தொழிற் பரப்புக்குள் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் 'ஊடுருவல்' செய்து தேநீர்ச்சாலையொன்றை நடாத்திவருவதைத் தொடர்ந்தே இம் மோதல் ஏற்பட்டுள்ளது.

புலோலி ப. நோ. கூ. சங்கத்தொழிற்பரப்புக்குள்ளுள்ள பருத்தித்துறை அரசினர் (மந்திகை) ஆதாரவைத்தியசாலை சௌக்கியசேவைத் தொழிலாளர் நலன்புரிச்சங்கத்தின் தேநீர்ச்சாலையைக் கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம் பொறுப்பேற்றுநடாத்தி வருவது புலோலி ப. நோ. கூ. சங்கத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாம்.

இதுசம்பந்தமாகப் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தலைவர் திரு. வே. சதிர்காமலிங்கம் ஆட்சேபம் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் திரு. வே. சதிர்காமலிங்கம் கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவருக்கும் தனது கண்டனக்கடிதத்தை அனுப்பிவைத்திருக்கிறார். (ஈ)

# அரசியல் தீர்வு யோசனை: ரஞ்சித் அத்தபத்து வரவேற்பு

(கொழும்பு)

"பயங்கரவாதத்தை இராணுவத்தைக்கொண்டு முற்று முழுதாகத் தீர்த்துவிடமுடியாது. தமிழ் மக்களின் இன்றைய பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை நாமும் வரவேற்கிறோம்"

இவ்வாறு பெலியத்த எம். பி. டாக்டர் ரஞ்சித் அத்தபத்து பாராளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவசரகாலச்சட்ட பிரகடனம் தொடர்பான பிரேரணை மீது உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது;

"தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இங்கு கோரிக்கை விடுத்ததையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

"கல்வி, வேலைவாய்ப்பு துறைகளில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இந்த நாடு முழுவதுமே பிரச்சினைகள் உள்ளன. இப் பிரச்சினைகளை நாம் எல்லோரும் ஒன்றுசேர்ந்து தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்".

# "விரைவில் ஒரு தமிழ்நாடும் சிங்களநாடும் உருவாகியே தீரும்"

பாராளுமன்றத்தில் 'யோகேஸ்'

(கொழும்பு)

"சுன்னாகத்தில் 129 வீடுகள் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன. பலவீடுகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்தும் வன்முறைச் சம்பவங்கள் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீங்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் விரைவில் ஒரு தமிழ்நாடும், சிங்களநாடும் உருவாகியே தீரும்"

இவ்வாறு யாழ். எம். பி. யோகேஸ்வரன் பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்டம் தொடர்பான பிரேரணைமீது உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

"இந்நிலையில் நீங்கள் எவ்வாறு தமிழ் மக்களின் ஆதரவைப் பெறமுடியும்?

"நீங்கள் வடக்கு, கிழக்குப் பகுதிகளிலிருந்து இராணுவத்தை வெளியேற்றவேண்டும். இங்கு இராணுவ ஆட்சியை வைத்துக்கொண்டு எவ்வாறு தமிழ் மக்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளமுடியும்?

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களிடமிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும் ஆபாசப் புத்தகங்களை அமைச்சரொருவர் இங்கு காட்டினார். அந்த அமைச்சருக்கு அது எப்படி வந்தது என்பதை நாம் அறியவேண்டும். தடுப்புக் காவலுள்ளவர்களிடமிருந்து பெறப்படும் பொருட்கள், தஸ்தாவேஜுகள் பாதுகாப்பு அமைச்சில் அல்லவா இருக்க வேண்டும். இது எப்படி மற்றவர்கள் கைக்கு வந்தது'. என்றும் அவர் கேட்டுக்கொண்டார். [இ-வெ]

# கவுணாவத்தை வேள்வி: தடுக்குமாறு உத்தரவு?

(மாவிட்டபுரம்)

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் இன்று வேள்வியை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நேரத்தில் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

கீரிமலை கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் பாரம்பரியமாக இடம்பெற்று வந்த வேள்வியை தொடர்ந்தும் செய்ய அனுமதிக்குமாறு கோரி மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட மனுவின் மீது மல்லாகம் நீதிபதி வழங்கிய தீர்ப்பில் இந்த வேள்வியை பொலிசார் தடை செய்யக்கூடாதென உத்தரவிட்டிருந்தார். இத்தீர்ப்பை அடுத்து வேள்வியை நிறைவேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிலையில் இவ்வேள்வியை நடத்துவதற்கு எதிர்ப்பும் கிளம்பியுள்ளது.

காங்கேசன்துறைப் பொலிசாருக்கும் பொலிஸ்மா அதிபருக்கும் பிரதேச அபிவிருத்தி அமைச்சருக்கும் பொதுமக்களால் மகஜர்கள் அனுப்பப்பட்டு இந்தவேள்வியை தடை செய்யுமாறு கோரப்பட்டு இருந்தது இவ்வாறு வேள்விக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்ப்பும் கிளம்பியுள்ளதால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் வேள்விக்கு முன்னர் நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிசார் மேற்படி ஆலயச் சுற்றாடலில் கண்காணிப்பிலும் ரோந்திலும் ஈடுபடுவர். உயர்மட்ட பொலிஸ் அதிகாரிகளின் உத்தரவின்பேரில் காங்கேசன்துறை பொலிஸ்பொறுப்பதிகாரி திரு. கே. ஆர். இராமச்சந்திரன் தலைமையிலான பொலிஸ்கோஷ்டி மேற்படி கண்காணிப்பிலும் ரோந்திலும் ஈடுபட்டுள்ளது. அதே நேரத்தில் நீதிமன்ற தீர்ப்பின்படி வேள்வியை நடத்த சகல ஒழுங்கும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய முகாமையாளர்கள் தெரிவித்தனர்.

இதேநேரத்தில் பொலிஸ் தலைமையகத்திலிருந்து யாழ். மாவட்டப் பொலிசாருக்கு கிடைத்துள்ள பணிப்புரையில் உத்தேச வேள்வியினால் அமைதிக்கு பங்கம் ஏற்படும் என்று கருதப்படுவதால் வேள்வியை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக நேற்றிரவு கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

## முல்லைத்தீவு--

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் வித்தியானந்தன் தமது தலைமையுரையில் மேலும் கூறியதாவது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 4-வது அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதியில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகமொன்று உருவாக வேண்டுமென வற்புறுத்தினோம். அதனைத்தொடர்ந்து மகாநாடு நடைபெற்ற அதே ஆண்டு யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

பின்னர் மட்டக்களப்பில் நடைபெற்றபிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டில் கிழக்கிலங்கையில் பல்கலைக்கழகமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினோம். அதற்கமைய மட்டக்களப்பு - வந்தாறுமூலையில் பல்கலைக்கழகக் கல்லூரியொன்று அமைக்கப்பட்டது. இன்று முல்லை மாவட்ட தமிழாராய்ச்சி மகாநாட்டில் முல்லைத்தீவில் விவசாயக் கல்லூரி அமைக்கப்பட வேண்டுமென கேட்கின்றோம். இக்கோரிக்கையும் நிறைவேறுமென எதிர்பார்க்கிறோம்" என்றார்.

முல்லைத்தீவின் பலமுக்கிய இடங்கள் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. வீதியோரங்களில் வாழை மரங்களும், மகர தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. மகாநாட்டு நிகழ்ச்சிகளைப்பார்வையிட பெருந்திரளானவர்கள் வந்திருந்தனர். இம்மகாநாட்டையொட்டி சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது

நேற்றைய முதல்நாள் நிகழ்ச்சி இறுதியில் திரு. அற்புதராஜா நன்றியுரை கூறினார்.

இம்மகாநாட்டில் முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. மரியநாயகம் ஆகியோர் பங்குபற்றவில்லை.

முல்லைத்தீவு பிராந்திய தமிழாராய்ச்சி மகாநாட்டின் இன்றைய நிகழ்ச்சிகள் புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் நடைபெறும.

## ரங்கநாதன்..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காவலாளராகவும் பணியாற்றினார். வள்ளியம்மை என்ற மங்கையைத் திருமணம் செய்த இவருக்கு, சட்டத்தரணி ஆர். ஸ்ரீனிவாசன் என்ற ஏகபுதல்வர் மட்டுமே இருக்கின்றார்.

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டதையடுத்து, அதற்கான நஷ்டஈட்டை அரசிடம் கோரி [illegible] ரங்கநாதன் தயாரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று அதிகாலை 1-30 மணிக்கு இவர் காலமானார். இவரின் இறுதிச்சடங்குகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும். (அ)

## திருக்குறள் மாநாடு

(வேலணை)

தமிழ் மறைக் கழகத்தின் 23வது திருக்குறள் மகாநாடு நேற்று மண்டைதீவு சிறப்புலவர் கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பமானது.

இரண்டாம்நாள் நிகழ்ச்சிகள் இன்றுகாலை 8 மணிக்கு வேலணை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. பொன். கணேசன் தலைமையில் ஆரம்பமாகின்றன.

# ஏமாந்த தமிழ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நிலை ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணம் என்ன? முன்னரும் பல தடவைகள் நடந்த இக்கலவரங்கள்பற்றி நானும் அரசுக்குப் பல மகஜர்களை சமர்ப்பித்தேன். செனட்சபையில் இருந்தபோது இவ்விடயங்கள்பற்றி நீண்டநேரம் பேசினேன். மாறிமாறி ஆட்சிக்கு வந்தவர்களிடம் மகஜர்கள் சமர்ப்பித்தேன். தமிழ் மக்களின் கல்வி, உத்தியோகம், அபிவிருத்திபற்றி பேசியிருக்கிறேன். ஆட்சியிலிருந்தவர்களெல்லாம், மகஜர்களை வாங்கிப்பார்த்துவிட்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்கள். ஆனால் எதுவுமே நடக்கவில்லை.

### தமிழரின் பிரச்னை

"தமிழர் படையெடுத்து இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றும் ஆட்சிக்கு வந்தால் அவர்களைவிரட்டியடித்து விடுவோம் என்றும் சிங்கள மக்களுக்கு வாக்குறுதியளித்து பதவிக்கு வந்தார்களே தவிர தமிழரின் உண்மையான பிரச்னைகளைக்கூறி எவரும்ஆட்சிக்கு வரவில்லை. தமிழர் பிரச்னைகளை சிங்களத்தலைவர்கள் எவரும் சிங்கள மக்களுக்கு விளங்கப்படுத்தமாட்டார்கள். அப்படி நடந்தால் அவர்கள் ஆட்சிக்குவரமுடியாது. தமிழருக்கு விரோதமாக கூறினாலே ஆட்சிக்கு வரக்கூடியநிலை இருந்தது. மனிதனின் அடிப்படை ஆசை அதிகாரமே.

### நாடு தானாக பிரிந்துள்ளது

இங்கு நடந்ததென்ன? ஐம்பதிற்கு ஐம்பது, பின் சமஷ்டி, கடைசியாக தனிநாடு - தமிழ்ஈழம் என்ற நிலைக்கு வந்தார்கள். தமிழ் மக்களின் உணர்ச்சிகளை தூண்டி விட்டு பதவிக்கு வந்தார்கள் இதனால் இன்று நாடு தானாகவே பிரிந்த நாடாக இருக்கிறது.

ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்பதில்லை. சிங்களவர் சொல்வதை தமிழர் கேட்பதில்லை. தமிழர் சொல்வதை சிங்களவர் கேட்பதில்லை இந்த மாறுபாட்டிற்கு என்ன அடிப்படைக் காரணம்?

### "பொலிஸ் இராணுவம் படித்ததென்ன?"

"இன்று பொலிசாராகவும், இராணுவத்தினராகவும் இருக்கும் இளைஞர்கள் சுமார் 25 வருடங்களுக்கு முன்னர் 1956ம் ஆண்டளவில், பாடசாலையில் படித்ததென்ன? பாடப்புத்தகங்களில், இளமையில் கற்றதென்ன? "இது சிங்களநாடு. தமிழர்கள் தென் இந்தியாவில் இருந்து எங்கள் நாட்டைக் கைப்பற்ற வந்தவர்களே படையெடுத்து வந்த தமிழர்களில்பலர் திரும்பிவிட்டனர். சிலர் மட்டுமே இங்கு தங்கிவிட்டனர்" என்றுதான் படித்தார்கள். அதை உண்மையென அவர்கள் நம்பினார்கள் இதனால் இங்குள்ள தமிழர், உங்களுக்கு எதிரானவர்கள் என்பது அவர்களது மனதில் பதிந்துவிட்டது. தமிழர்கள் அரசுக்கு எதிரானவர்கள் என்று எண்ணினார்கள். தங்கள் சொந்தப்பூமியை சுவீகரிக்க ஆங்கிலேயர்களுக்கு உதவியாக இருந்தவர்களே தோட்டத் தொழிலாளர்கள் என்று நினைத்தார்கள். தமிழர்கள், அது யாராயிருந்தாலும், எங்கிருந்தாலும், சிங்கள சமூகத்தின் விரோதிகள் என்ற எண்ணம். பொலிஸ், இராணுவப்படையிடம் வேரூன்றிவிட்டது. அதில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

### தமிழ்பகுதியை எரிக்கிறார்கள்

"இங்கு தேர்தல் நடந்தால் பாதுகாப்புடன் வருகிறார்கள் பொலிஸாரோ, இராணுவத்தினரோ சுடப்பட்டால் தங்கள் விரோதிகள் என்று கருதும் தமிழர்கள் வாழும் இடத்தை எரிக்கிறார்கள்

"அதிகாரம் விரும்பிய தலைவர்கள் மக்களின் மனதை திசைதிருப்பி விட்டார்கள் இன்றுள்ள நிலைக்கு காரணம் சிலபாடப்புத்தகங்களே!

"நாடு இன்று பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு பரிகாரம் என்ன? இந்நிலையில் நாங்கள் சொல்வதை நம்பி ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள் நீதி வழங்க மாட்டார்கள்!

### நீதிகிடைக்கும் எனஏமாந்து

"பலவருடங்களாக அரசிடமிருந்து நீதிகிடைக்கும் என்று நம்பியவர்கள் நீண்டகாலமாக நீதியை எதிர்பார்த்து ஏமாந்த தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரும் விரக்தி ஏற்பட்டு இன்று துப்பாக்கி ஏந்துகிறார்கள்.

"பேச்சு வார்த்தை மூலம் இன்றுள்ள நிலைமைக்கு ஒரு தீர்வு காணப்பட வேண்டும். மாணவர் முதலில் தீயகருத்துக்களை மனதில் ஏற்படுத்தும் பாடநூல்கள் எரிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்

## ரூப வாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-01 | ஆங்கில நிகழ்ச்சி. |
| 6-15 | விளையாட்டு நிகழ்ச்சி |
| 7-00 | செய்தி மஞ்சரி (தமிழ்) |
| 7-15 | இசை நிகழ்ச்சி |
| 7-45 | வெசாக் நிகழ்ச்சி |
| 8-15 | செய்தி மஞ்சரி [சிங்களம்] |
| 8-30 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-00 | சிங்கள நிகழ்ச்சி |
| 9-30 | செய்தி மஞ்சரி [ஆங்கிலம்] |
| 9-45 | பௌத்த நிகழ்ச்சி |

## ஆதீனத்தில் ஞானசம்பந்தர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆதீனத்தில் திருஞானசம்பந்தர் குருபூசை 29-ம் திகதி 10 மணிக்கு இடம்பெறும்.

சங்காபிஷேகம், மகேஸ்வர பூசை, திருக்கல்யாணம், முதலியவற்றுடன் சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளையின் பண்ணிசைக் கச்சேரியும் இடம்பெறும்.

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் தவநாயகம்

திருமதி பாக்கியம் தவநாயகம் காலமானார். இவர் காலஞ்சென்ற தவநாயகத்தின் அன்புமனைவியும். [illegible], குருபாலசிங்கம், பாலசந்திரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், கனகம்மா, ஆனந்தலஷ்மி ஆகியோரின் அன்புமாமியாருமாவார், அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக இன்று 28-5-83 சனிக்கிழமைபிற்பகல் 3 மணிக்கு 37, வேம்படி றோட், யாழ்ப்பாணம்இல்லத்திலிருந்து கல்லூண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

7383

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber ஐ. 100236/81. Eelanadu-P. O. Box, 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.